விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 23 செவ்வாய்க்கிழமை (09.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## நாட்டை இராணுவ மயமாக்குவதற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை இராணுவ மயமாக்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியிலான ஆட்சியை முன்னெடுக்கவே கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்கள் ஆணை வழங்கி

15

## விபரீத முடிவெடுத்த 16 வயது மாணவன் மரணம்

### உடுப்பிட்டியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு துவாலி வீதியில் விபரீத முடிவெடுத்த பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே

15

### யாழைச் சேர்ந்தவர் களனி விபத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

களனியில் இடம்பெற்ற வீதி விபத்தில் யாழைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சின்னத்தம்பி தவநேசன் (வயது-

15

# உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படும்

## அமைச்சரவையில் நிதியமைச்சர் பசில் எச்சரிக்கை



(கொழும்பு)

**எதிர்வரும் காலத்தில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ் எச்சரித்துள்ளார்.**

**அமைச்சரவை கூட்டத்தின்போதே நிதியமைச்சர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பருவத்தில் பயிரிடப்படும் நிலங்களில் மூன்றில் ஒரு பகுதி மாத்திரமே பயிர்ச்செய்கைக்கு தயார் படுத்தப்பட்டுள்ளன.

தற்போது குரு

15

### நாட்டில் மேலும் 19 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 19 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

மரணமானவர்களில் 13 ஆண்களும் 6 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

15

### 24 மணி நேரத்துக்குள் வடக்கு உட்பட நாடு முழுவதும் கனத்த மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

24 மணி நேரத்துக்குள் வடக்கு உட்பட நாடு முழுவதும் கனத்த மழைக்கு வாய்ப்புள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மாலை அல்லது இரவு வேளையில் பல இடங்களில் மழை அல்லது

15

### கடும் எதிர்ப்பையடுத்து தீவகத்தில் காணி அபகரிப்பு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கடுமையான எதிர்ப்பையடுத்து தீவகத்தில் காணி அபகரிப்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மூன்று இடங்களில்

15



## தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாக பாராளுமன்றில் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு கோவிட் தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய இயலுமை காணப்படுவதாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளார் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

15

## இந்திய மீனவரின் சடலம் காரைநகரில் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

கடல் சீற்றம் காரணமாக நடுக்கடலில் தவறிவிழுந்த இந்திய மீனவரொருவரின் சடலம் காரைநகர் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் இருந்து கடந்த 2ஆம் திகதி மூவர் மீன்பிடிக்க கடலுக்குள் சென்ற நிலையில் கடல் சீற்றம் காரணமாக படகிலிருந்து மீனவர்

15

## இந்திய மீனவர்களை விரட்டியடிப்போம்

### சபையில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

தேச எல்லையை தாண்டி இலங்கைக்குள் நுழையும் இந்திய மீனவர்களை கைது செய்யும் செயற்

15

### கொரோனா +679

(கொழும்பு)

நாட்டில் மேலும் 679 கோவிட் தொற்றாளர்கள் அடை

15

### மாற்றுவழியை நாடுவோம் பங்காளிக் கட்சிகள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)


"மக்களுக்கான பயணத்தை அரசு மேற்கொள்ளாவிட்டால் பங்காளிக் கட்சிகள் மாற்றுவழியை நாட வேண்டிவரும்."

இவ்வாறு அரச தலைமைக் கட்சிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் லங்கா

15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மட்டக்களப்பு நகரை முற்றுகையிட்டு விவசாயிகள் மாபெரும் போராட்டம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரை முற்றுகையிட்டு விவசாயிகள் நேற்று மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். விவசாயிகள் முன்னெடுத்த போராட்டம் காரணமாக நகரப்பகுதி முற்றாக முடங்கியது.

மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் உழவு இயந்திரங்களில் மட்டு நகரத்திற்கு சென்ற விவசாயிகள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டதோடு, நகரத்தையும் முற்றாக முடக்கியுள்ளனர்.

தங்களது விவசாயத்துக்குத் தேவையான யூரியா உரத்தினை உடனடியாக வழங்கக் கோரியும் அண்மையில் அமைச்சர் வெளியிட்ட கருத்தை கண்டித்தும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பல தடைகளைத் தாண்டியும் பேரணியாக சென்ற விவசாயிகள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர். (ம-03)


## வேலை வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு



**முன்னணி நிறுவனத்தில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸின் சிறந்த தலைவர் ஆகுங்கள்!**

நாங்கள் இலங்கையில்' சிறந்த நாமத்தைக் கொண்ட நிறுவனங்களில் ஒன்று, தேசிய மற்றும் சர்வதேச அளவில் உயரிய விருது பெற்ற நிறுவனம், தொழில் செய்வதற்கு சிறந்த சூழலைக் கொண்ட நிறுவனம், இது இலங்கையில் சிறந்த வியாபார நிறுவனங்களில் ஒரு நிறுவனம்.

**நாங்கள் எதிர்பார்ப்பது**

க.பொ.த சாதாரண தரம் / உயர்தரத்தில் தேர்ச்சி, சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் விரும்பத்தக்கது, சிறந்த தொடர்பாடல்திறன் கொண்ட 21-40 வயதுடையவர்கள்.

| | |
|---|---|
| நாங்கள் வழங்குகின்றோம் | . காப்புறுதி ஆலோசகர்<br>. E-Consultant<br>. தனிப்பட்ட நிதி முகாமையாளர் |
| உங்களுக்கு கிடைக்கக்கூடியது | . எல்லையற்ற வருமானம்<br>. மேல்நோக்கி செல்லக்கூடிய தொழில் பாதை<br>. விஷேட பயிற்சிகள்<br>. திருப்திகரமாக சேவை செய்யக்கூடிய பொருத்தமான சூழல்<br>. மேலதிக படிகள், Laptop, Tab, கடன் வசதி |

Great Place To Work. Certified APR 2021 - MAR 2022 LKA

**உங்களை வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்வோம்!**

- **நேர்முகத்தேர்வு இடம்பெறும் திகதிகள் :** 11,12,15 நவம்பர் காலை 10.00 – 12.00 வரை
- **இடம் :** நெல்லியடி பிரதான வீதி, நாவலர்மடம் (திருமகள் சோதி பஸ் நிலையம் முன்பாக)

தொடர்புகளுக்கு :
**A. பிரதீபா**
விற்பனை முகாமையாளர்
**077 171 0256**

உங்கள் விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமும் சமர்ப்பிக்கலாம்.
theepa147@yahoo.com

உங்கள் வாழ்க்கைக்கு. எங்கள் பலம். (8542) UNION ASSURANCE A JOHN KEELLS COMPANY


## 12 ஆம் ஆண்டின் நீங்கா நினைவலைகள்

### காசிப்பிள்ளை செல்லத்துரை



தோற்றம் - 03.09.1939 மறைவு - 23.10.2009

அன்பின் தந்தையே!
கண்களில் எம்மை சுமந்தீர்கள்
கணப்பொழுதில்
எம்மை விட்டு கரைந்தீர்கள், காற்றில்
இந்த மண்ணில் உங்களைப் போல்
யார் வருவார்
எம் துயர் போக்க எண்ணிப் பதைக்கின்றோம்
விண்ணில் தேடுகின்றோம்.

காலங்கள் பல சென்றாலும்
கடைசி வரை உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

(8549)

டச்சு றோட், உடுவில், சுன்னாகம் -குடும்பத்தினர்-

# மரண அறிவித்தல்



## திருமதி நாகரத்தினம் இக்னேசியஸ்

### (குஞ்சக்கா)

**பிறப்பு : 1951.11.03 இறப்பு : 2021.11.07**

யாழ். அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் வவுனியா மதகுவைத்தகுளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் இக்னேசியஸ் நேற்று முன்தினம் (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லத்துரை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி சூசைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் இக்னேசியஸின் ஆருயிர் மனைவியும் யூட்ஸ்ரிபன், யூடிசன், யூட்பெபியன், கேமாயூடிற்றா, ரூபியூடிற்றா, யூட்கொன்ஸ்ரனி ஆகியோரின் அருமைத் தாயாரும் கமலேஸ்வரி, வசுந்திராதேவி, காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன், இரத்தினம் மற்றும் செல்வராணி, சண்முகநாதன், காலஞ்சென்ற உதயகுமார், இராஜகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தினி, ஜூலியா, அன்பு, கண்ணன், ராஜா, கனிஸ்டா ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலனின் வளர்ப்புத் தாயாரும் லவிசன், டியோன், மொவின், தேய்டஸ், சண்டினோ, ஜுவின், திபானி, கனிஸ், டிஸ்னா, சிரோமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (10.11.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வவுனியா மதகுவைத்தகுளம் வேளாங்கன்னி மாதா கோவிலில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் தோணிக்கல் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2983)

இல. 25, மாதா கோவில் வீதி, மதகுவைத்தகுளம், வவுனியா.
077 489 6888
076 101 6024
தகவல்: குடும்பத்தினர்

# பௌத்த சின்னங்கள் காணப்பட்டால் சிங்கள மக்கள் வாழ்ந்ததாக கருத முடியாது

## வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் புஸ்பரட்ணம்



(நெளுக்குளம்)

**வெடுக்குநாறிமலையில் பௌத்த சின்னங்கள் காணப்படுமானால் அங்கு சிங்கள மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாக பார்ப்பது மிகவும் தவறானது என யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்தார்.**

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆதியிலே பௌத்தம் என்பது தமிழர்களுக்குமுரிய ஒரு பண்பாட்டுச்சின்னமாகத்தான் காணப்பட்டது.

அதேபோல் இந்து மத மும் விளங்கியது. ஆகவே வன்னிப்பிராந்தியத்தில் வெடுக்குநாறி மலையில் பௌத்த சின்னங்கள் காணப்படுமானால் அங்கு சிங்கள மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாக பார்ப்பது மிகவும் தவறான ஒரு கண்ணோட்டம். அவ்வாறு பார்க்க முடியாது.

ஆகவே வெடுக்குநாறி மலையில் ஆதியிலே இந்து மதம் இருந்தது. பின்னர் வன்னி பிராந்தியத்தில் தமிழ் பௌத்தமும் இருந்திருக்கலாம் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

பௌத்த சிங்கள மக்கள் வாழாத இடங்களில் பௌத்த சின்னங்கள் காணப்படுமானால் அந்த இடங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழரோடு தொடர்புபடுத்தித் தான் அதனை பார்க்க வேண்டும்.

பௌத்தம் சார்ந்த சின்னங்களை ஒரு வழிபாட்டுக்குரிய இடங்களாக மாற்றுவது பொருத்தமில்லை.

மாறாக முன்பொரு காலத்தில் வன்னியிலே பௌத்த மதமும் இருந்ததென்ற ஒரு அடையாளமாக அதனை பாதுகாக்கலாமே தவிர அதனை ஒரு வழிபாட்டுக்குரிய இடமாக மாற்றுவது இன நல்லுறவை பாதிக்கின்ற ஒரு செயலாக தான் இருக்குமென தெரிவித்தார். (4-5-299)

---

### 6-9 தரங்களுக்கான கல்வி நடவடிக்கை குறித்து

# இரண்டு வாரங்களில் முடிவு

**சுசில்**

(கொழும்பு)

தரம் ஆறு முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது குறித்து அடுத்த இரண்டு வாரங்களில் தீர்மானிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையில் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவதாக தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகள் அனுமதியை அடுத்து 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான ஆரம்ப பிரிவுகள் தொடங்கப்பட்டன.

இதனை அடுத்து தரம் 10, 11, 12 மற்றும் 13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இந்நிலையில் அடுத்த வாரம் மற்ற தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (நி-5)

---

### சீரற்ற காலநிலையால் பாதிப்பா?

# 117 ஐ அழையுங்கள்

(கொழும்பு)

தாழமுக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை பாதிப்பு தொடர்பான அவசர உதவிகளுக்கு துரித தொலைபேசி இலக்கம் '117' ஐ தொடர்பு கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.


நாட்டின் எந்தப் பகுதியிலும் அனர்த்த நிலைமை ஏற்பட்டால் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என்ற துரித தொலைபேசி இலக்கத்திற்குத் தெரிவிக்க முடியும்.

இது 24 மணி நேரமும் செயற்படும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையப் பிரதிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். (நி)

---

### மிலிந்த மொரகொட-நிர்மலா சீதாராமன்

# சந்தித்து கலந்துரையாடல்




(டில்லி)

இந்தியாவுக்கான உயர் ஸ்தானிகர் ஸ்ரீமிலிந்த மொரகொட இந்தியாவின் நிதி மற்றும் பெரு நிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமனை அண்மையில் டில்லியில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையேயான தற்போதுள்ள பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர். (நி-5)

---

### மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகை



(மாலே)

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹம்மத் சோலிஹ் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று இலங்கை வந்தடைந்தார்.

பங்களாதேஷ், மாலைதீவு, சிஷெல்ஸ், இலங்கை ஆகிய நான்கு நாடுகள் பங்குபற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கிண்ண சர்வதேச கால்பந் தாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்பதற்காக அவர் வருகை தந்தார். (நி-5)

---

# கடும் மழையால் வீதியின் குறுக்காக வீழ்ந்தது மரம்



(அக்கராயன்)

உடையார்கட்டு மூங்கிலாறு தேராவில் கிழக்கு பகுதியில் உள்ள காணி ஒன்றில் உள்ள முதிரை மரம் ஒன்று வேருடன் சரிந்து விழுந்தது.

நேற்று முன்தினம் பெய்த கடும் மழை மற்றும் காற்றின் காரணமாக வீதியின் குறுக்காக விழுந்துள்ளது.

இதன்காரணமாக போக்குவரத்தில் ஈடுபட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதேவேளை மூங்கிலாறு தெற்கு கிராமத்தில் பல வீதிகளும்மழை வெள்ளத்தினால் முற்றாக சேதமடைந்து மக்கள் போக்குவரத்திற்கு பாரிய இடையூறாக காணப்படுகின்றன. (4-5-350)

## இளைஞர் கழகங்களுக்கிடையிலான

# தேசிய மட்டப் போட்டிகளின் திகதிகள் வெளியீடு

இளைஞர் கழகங்களுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகள் நடைபெறும் திகதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் வலைப்பந்தாட்டம், கபடி, கூடைப்பந்தாட்டம், கரம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகளை யாழ்ப்பாணத்திலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி ஆண்கள், பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டம் இன்று, நாளை அம்பாந்தோட்டையிலும், ஆண்கள், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் யாழ்ப்பாணத்திலும், ஆண்கள், பெண்களுக்கான கபடி எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம் எதிர்வரும் 15,16,17,18 ஆம் திகதிகள் யாழ்ப்பாணத்திலும், ஆண்கள், பெண்களுக்கான கரம் ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆட்டங்கள் யாழ்ப்பாணத்திலும், ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டம் எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் யாழ்ப் பாணத்திலும், ஆண்கள், பெண்களுக்கான எல்லே எதிர்வரும் 19, 20,21 ஆம் திகதிகளில் குருநாகலிலும், ஆண்களுக்கான உதைபந்தாட்டம் எதிர்வரும் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், ஆண்கள், பெண்களுக்கான கயிறு இழுத்தல் எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், பெண்களுக்கான உதைபந்தாட்டம் எதிர்வரும் 23,24,25 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், பெண்களுக்கான கிரிக்கெட் எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் வவுனியாவிலும், ஆண்களுக்கான கிரிக்கெட் எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் வவுனியாவிலும், ஆண்கள், பெண்களுக்கான மரதன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 01,02 ஆம் திகதிகளில் கொழும்பிலும், ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் டிசெம்பர் மாதம் 14,15,16, 17 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (4-6-90)

## உதைபந்தாட்டப் போட்டி

# இறுதிக்குள் அல்வாய் மனோகரா



கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் அல்வாய் மனோகரா அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

இதன் அரையிறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை இமையாணன் மத்தி இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. அரையிறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடிய்வில்லை.

இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் மனோகரா அணி வீரர் சாருஜன் இரு கோல்களைப் போட ஆட்ட நேர முடிவில் அல்வாய் மனோகரா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றறது (4-6-90)

# ஆண்களுக்கான எல்லே போட்டி கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்

கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி யூத் இளைஞர் கழக அணி மோதியது.

போட்டியில் இரு அணிகளும் ஓட்டங்களைப் பெற முடியாத நிலையில் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் கரவெட்டி ஞானம்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-6-90)



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2445

Search for people, places and things

### அமுதன்



யார் காலையும் பிடித்ததில்லை என்று பெருமை பேச வேண்டியது




எனது கால் என்றால் மட்டும் நாக்கை தொங்க விட்டு ஓடி வருவது, லகுட பாண்டிகளா

### பிரியா

ஒரு பெண்ணை தவிர மத்த பெண்கள் எல்லாம் அழகற்றுத் தெரியும் போது அவனுக்கு காதல் வந்திருக்கும்



ஒரு பெண்ணை தவிர எல்லா பெண்களும் அழகியா தெரியும் போது அவனுக்கு கல்யாணம் நடந்திருக்கும்

### ஜெயக்குமார்

கணவன்: இன்னைக்கு என்ன சாம்பார்

மனைவி : நேத்து மூக்குப்பிடிக்க சாப்பிட்டிங்களே, அதே சாம்பார்தான்

கணவன் : சரி இன்னிக்கு மூக்கைப் பிடிச்சுட்டு சாப்பிடறேன்

### கஜனிக்கா

அப்பனே ஆண்டவா 'கேட்டது' தான் நடக்கல



'கெட்டது' ஆச்சும் நடக்காம பார்த்துக்கோ

### நிருன்ராஜ்

மொபைல் பாத்தா தான் உலகத்துல நடக்குறதே தெரியுது



மொபைல்ல கீழ வச்சா தான் வீட்டுல நடக்குறதே புரியுது

### கௌரி

அண்னே அண்னாத்த படம் reel பெட்டிய குரங்கு தூக்கிட்டுப் போயிட்டன்ன

போன வாரம் என்ன படம்டா போட்ட விசுவாசம் அத தூக்கி இதுல போடு டா



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

**09.11.2021**
**ஐப்பசி 23, செவ்வாய்க்கிழமை**
**பஞ்சமி பிற்பகல் 4.29 மணிவரை**
**பூராடம் முன்னிரவு 10.59 மணிவரை**
**சுபநேரம்- 10.35-12.05 மணிவரை**
**இராகு காலம்- 3.05-4.35 மணிவரை**
**சந்திராஷ்டமம்- ரோகினி, மிருகசீரிடம்**
**ஸ்கந்த பஞ்சமி**

**வளவன்**


மேஷம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.


ரிஷபம்

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.


மிதுனம்

எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.


கடகம்

உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.


சிம்மம்

உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


கன்னி

பேச்சில் கனிவு பிறக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் மூலம் நம்பிக்கைகள் நடைபெறலாம், காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


துலாம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.


விருச்சிகம்

செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூல முண்டு.


தனுசு

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


மகரம்

இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணும் நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.


கும்பம்

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.


மீனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

தான் என்ற அகந்தையிருக்குமிடத்தில் நிச்சயமாகக் குழப்பமிருக்கும்.

# சுகாதார முறைகளைப் பின்பற்றாவிட்டால் மீண்டும் பாடசாலைகளை மூடும் நிலை வரும்


## மருத்துவர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

**கொரோனா அச்சுறுத்தல் தொடர்பில் பொதுமக்கள், சுகாதார வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்றாவிட்டால், பாடசாலைகளையும் நாட்டையும் மீண்டும் மூட வேண்டிய நிலை ஏற்படக் கூடும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்தார்.**

அனைத்து பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், 10 முதல் 13 வரையான தரங்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. தற்போது சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் சுகாதார நிலைமையைப் பாதுகாப்பது அவசியமானதாகும் என அவர் குறிப்பிட்டார்.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைய அனைவரும் செயற்பட வேண்டும். நிலைமை மீண்டும் மோசமானால், நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார்.



மாணவர்கள் தற்போது மீண்டும் பாடசாலைகளுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், பாடசாலைகளை மீண்டும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டால் அது மாணவர்களைப் பாரிய அளவில் பாதிக்கக்கூடும்.

மக்கள் தமது உடை மற்றும் அலங்காரம் தொடர்பில் எவ்வளவு அக்கறை காட்டுகின்றார்களோ, அந்தளவுக்கு பொது இடங்களில் சுகாதார விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# அக்ரஹார காப்பீட்டுத் திட்டத்துக்கு ஓய்வூதியர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை அக்ரஹார காப்பீட்டுக்காக திரும்பப் பெறும் அரசின் முடிவுக்கு ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பு தனது எதிர்ப்பைத் தெரிவித்தது.

கடந்த 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், ஓய்வூதியர்களிடம் இருந்து மாதம் 400 ரூபாவும் 70 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியர்களிடம் இருந்து மாதம் 600 ரூபாவும் பிடித்து வைக்கஅரசுமுடிவுசெய்தது.

இந்த திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறியிடம் மனு ஒன்றை கையளிக்க ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் பிரதிநிதிகள் திட்டமிட்டுள்ளனர். (நி-5)

# 2.3 டிரில்லியன் கடன் பெற்று அரசாங்கம் சாதித்தது என்ன?

## மரிக்கார் கேள்வி

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் 2021 ஆம் ஆண்டில் மட்டும் 2.3 டிரில்லியன் கடன்களைப் பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

குறித்த பெருந்தொகைப் பணத்தை அர சாங்கம் எதற்கு பயன் படுத்தியது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கேள்வி எழுப்பினார். நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கடந்த அரசாங்கத்தினால் பெறப்பட்ட கடன்களை தீர்ப்பதற்கே குறித்த கடன் தொகை பெறப்பட்டது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

எவ்வாறாயினும்தாமரை கோபுரம், துறைமுகங்கள், மைதானங்கள், விமான நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் குடும்பத்தினர் பயணம் செய்வதற்கும் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பெரும் தொகை கடனாகப் பெறப்பட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார். (நி-5)


# பகிரங்க ஏலவிற்பனை

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில் பின்வரும் பொருட்கள், கட்டடங்கள் 18.11.2021 அன்று காலை 10.00 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளன.

1. கதவுகள், நிலைகள் மற்றும் யன்னல்கள்
2. பழைய மரங்கள் , சிலாகைகள்
3. விறகுகள்
4. பழைய கட்டடங்கள்
5. தகரங்கள் / இரும்புகள்


**நிபந்தனைகள்**

1) ஏலம் குறித்த தினத்தில் நடைபெறும். இதனை இரத்துச் செய்யும் அதிகாரம் தலைவருக்கு உள்ளது.
2) ஏலத்தில் வெற்றி பெற்றவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி பொருட்களை அகற்ற வேண்டும்.
3) கட்டட ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏல பெறுமதியின் 20% மீள் அளிக்கக்கூடிய வைப்பாக செலுத்த வேண்டும். பார்வையிடும் நேரம் அலுவலக நாட்களில் காலை 10.00 -12.00 மணிவரை

(8539)

தலைவர்
கூட்டுறவு வைத்தியசாலை சமூகம். 021 224 3722 / 076 771 1417

# வடக்கில் 13 ஆம் திகதிவரை கனமழை பெய்ய வாய்ப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி இடியுடன் கூடிய கனமழை பெய்யும் வாய்ப்புள்ளதாகவும் அத்துடன் கடற்பகுதி கொந்தளிப்பாக இருக்கும் எனவும் இதனால் மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்வதை தவிர்க்குமாறும் யாழ். பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது,

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் காற்று ஒருங்கிணைவு காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் இடியுடன் கூடிய கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

அதேவேளை வங்காள விரிகுடா கடற்பகுதியின் தென்கிழக்கு பகுதியில் தோன்றியுள்ள தாழமுக்கம் காரணமாக பல பகுதிகளுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதிவரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும் இன்று தாழமுக்கம் மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும். எனவே மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்ப்பது நல்லது.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் களைநாசினி விசிறுதல் மற்றும் உரமிடுதல் செயற்பாடுகளை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தவிர்ப்பது நல்லது எனவும் தெரிவித்தார். (4-5-33)

# ‘இந்துசமய ஆன்மிக வாழ்வியல்’ நூல் வெளியீட்டு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஓய்வுபெற்ற நூலக சேவையாளர் செல்வரட்ணம் பத்மநாதன் எழுதிய “இந்து சமய ஆன்மிக வாழ்வியல்” என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகப் பதில் நூலகர் கலாநிதி கல்பனா சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்.சி. சிறிசற்குணராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

நூல் மதிப்பீட்டுரையை சைவசித்தாந்தத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. பொ. சந்திரசேகர் நிகழ்த்தினார். (4-5-33)


# மக்களுடனான கலந்துரையாடலும் துண்டுப்பிரசுர விநியோகமும்

## மக்கள் விடுதலை முன்னணியால் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் விடுதலை முன்னணியின் “ஊரிலிருந்து தொடங்குவோம்” என்ற தொனிப் பொருளிலான மக்களுடனான உரையாடலும் துண்டுப்பிரசுர விநியோகமும் யாழில் ஆரம்பமானது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க, அக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதன்போது வியாபாரிகளிடமும் பொதுமக்களிடமும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன் ஆட்சி மாற்றத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது. இந்த செயற்றிட்டமானது மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களிலும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (4-5-33)



எதிர்வரும் நாட்களில் கடும் மழை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்கினைக் குறைக்கும் முகமாக பிரதான வெள்ள வடிகாலுக்குள் வந்து சேர்ந்த பிளாஸ்ரிக் போத்தல்கள், தடிகள் மற்றும் பிரதான வெள்ள வடிகா லினூடான சீராக வெள்ளநீர் வடிந்தோடும் வகையில் அதனை தடைசெய்யும் காரணிகளை இனங்கண்டு அவற்றினை அகற்றும் செயற்பாடுகளை யாழ்.மாநகர சபை முன்னெடுத்துள்ளது. (படம்: சிவசாந்தன்)

## ஆனையிறவில் கூடிய மழைவீழ்ச்சி

(குப்பிழான்)

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் ஆனையிறவில் கூடிய மழைவீழ்ச்சியாக 64.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். குறித்த காலப்பகுதியில் வடமராட்சி அம்பனில் 57.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (4-5-18)

# வெள்ளிக்கிழமைகளில் கொவிட் தடுப்பூசி வழங்கப்படும்

## சுகாதார வைத்திய அதிகாரி

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சினோபார்ம் 1 ஆவது மற்றும் 2 ஆவது தடுப்பூசிகள் வாராவாரம் வெள்ளிக்கிழமைகளில் காலை 8.30 முதல் மதியம் ஒரு மணி வரை கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வழங்கப்படும்.

மேலும் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட சுகாதார ஊழியர்களுக்கு 3ஆவது தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி கடந்த வாரம் வழங்கப்பட்டது.

விரைவில் பொதுமக்கள் மற்றும் முன்களப்பணியாளர்களுக்கும் 3ஆவது தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றப்படும் என கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (4-5-60)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.தெற்குப் பிரதேச சபையின் சுன்னாகம் பொதுநூலகத்துடன் “எங்கட புத்தகங்கள்” குழுமம் இணைந்து நடத்தும் “தொலைதூர வாசிப்பு” எனும் தொனிப் பொருளிலான நூல் கண்காட்சியை யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தனது குடும்பத்தினருடன் இணைந்து கண்காட்சியைப் பார்வையிட்டார். (படம்: ரவிசாந்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 120 | 120 |
| தக்காளி | 350 | 450 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 |
| கோவா | 200 | 160 | 200 | 200 |
| கரட் | 160 | 250 | 280 | 300 |
| பூசணி | 60 | 70 | 50 | 60 |
| புடோல் | 250 | 240 | 200 | 180 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 170 | 180 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 160 | 140 | 160 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 350 | 300 | 400 | 320 |
| லீக்ஸ் | 200 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 120 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 280 | 350 | 320 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 230 | 300 | 280 |
| போஞ்சி | 350 | 350 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | -- | 100 |
| தேசிக்காய் | 500 | 450 | 350 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 280 | 250 | 280 |
| வெங்காயப்பூ | -- | 350 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 150 | -- | 150 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | 120 |

அச்சமின்றி பாடசாலைக்கு அனுப்புங்கள்

# சிறுவர்கள் மத்தியில் தொற்று பரவும் வீதம் குறைவு

## விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா

(கொழும்பு)

சிறுவர்கள் மத்தியில் ஒருவருக்கொருவர் தொற்று பரவும் வீதம் மிகக் குறைவாகும். அதேபோன்று சிறுவர்களிடமிருந்து பெரியவர்களுக்கு தொற்று பரவும் வீதமும் மிகக் குறைவாகும்.

எனவே மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமானது. மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக மாத்திரமின்றி அனைத்து துறைகளினதும் முன்னேற்றத்திற்கும் கல்வி அவசியம்.

பிள்ளைகளுக்கு சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுதை பழக்கப்படுத்தி, அவை பாடசாலைகளில் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுமாயின் மாணவர்கள் மத்தியில் கொவிட் பரவுவதை தவிர்க்க முடியும்.

தற்போது கற்பித்தல் செயற்பாடுகளில் சில வரையறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரங்களுக்கும் இந்த வரையறைகள் நடைமுறைப்படுத்தப்படுமாயின், வெகுவிரைவில் விளையாட்டு உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# ரயில் மோதி இளைஞன் பலி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த ரயிலில் மோதி இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றது.

இவ்வாறு ரயிலில் மோதி விபத்துக்குள்ளானவர் முள்ளிப் பொத்தானை 95ஆம் கட்டை சதாம் நகரை சேர்ந்த, ஹமீத் முபீத் (20வயது) என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான நபர் தொலைபேசியில் ஹெட்போன் அணிந்தவாறு பேசிக்கொண்டிருந்ததாகவும், சக நண்பர்கள் புகையிரதம் வருவதை அவதானித்து கூச்சலிட்டதாகவும் ஹெட்போன் அணிந்திருந்தமையினால் அவருக்கு சரியாக கேட்காத நிலையில் நண்பர்கள் அவரை நோக்கி ஓடிய போதும் ரயில் வேகமாக அவரை மோதியதாகவும் தெரிவித்தனர்.

மேலும் விபத்துக்குள்ளானவரின் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம் கந்தளாய் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணை களை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாரத்தில் இரண்டு நாட்கள் கைதிகளை பார்வையிட அனுமதி

(கொழும்பு)

சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளை வாரத்தில் இரண்டு நாட்கள் பார்வையிட அவர்களின் உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகளின் பதில் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (நி-5)

# விவசாய சமூகத்துடன் இணைந்து அரசுக்கு எதிராக போராட்டம்



(கொழும்பு)

நவம்பர் 16 ஆம் திகதி இரண்டு மில்லியன் விவசாய சமூகத்துடன் இணைந்து அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-5)


# அரசாங்க அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

### நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2022

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ்.மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2022ம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42) மற்றும் பிரதேச செயலகங்களில் **2021-11-09ஆம் திகதி தொடக்கம் 2021-12-09ஆம்** திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது **WWW.jaffna.dist.gov.lk** என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2021-12-09** திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4") இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா **500/=** இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக **"மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலக்க இலங்கை வங்கி கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக்கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் **2021-12-09** திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

**பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் தொகுதி விபரம்**

**பொருட்கள்**

- காகிதாதிகள், எழுதுகருவிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
- கணினிகள், அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்.
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர் பலகைகள் மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
- இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
- இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்
- மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகம்
- விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்
- காலை, மதிய, இரவு உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள்.
- பலசரக்கு, சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் உபகரணங்கள்.
- அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள்
- கட்டட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள்
- துணி வகைகள்
- தளபாடங்கள்
- விவசாயப் பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்.
- மீன் பிடி உபகரணங்கள்
- மருந்துப் பொருட்களும் உபகரணங்களும்.
- சூரிய மின்கலங்கள் மற்றும் திருத்தங்கள்
- நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

**வேலைகள்**

- கட்டடங்கள்,
- வீதிகள்
- பாலங்கள்

**சேவைகள்**

- சுத்திகரிப்பு சேவை
- பாதுகாப்பு சேவை
- பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவை
- படப்பிடிப்பு சேவை
- குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- போட்டோ பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்பு முறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல்
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- ஏனைய சேவைகள்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
மாவட்ட செயலாளருக்காக,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (C-2984)

# தொற்று நோய்களை எதிர்கொள்ள உலகத் தலைவர்கள் தயாராக வேண்டும்

## தீவிரவாதிகளின் உயிரியல் தாக்குதல் அபாயம் குறித்து பில்கேட்ஸ்

(வோஷிங்டன்)

எதிர்காலத்தில் பயங்கரவாதிகள் உயிரியல் ஆயுதங்களை தாக்குதல்களுக்குப் பயன்படுத்தும் சாத்தியங்கள் மிகமிக அதிகம் உள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் எச்சரித்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்களை முறியடிக்க இப்போதே தயாராக வேண்டும் என ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஊடாக உலகத் தலைவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் பரபரப்பான விமான நிலையங்களில் பெரியம்மை காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸை ஒரு உயிரியல் ஆயுதமாக பயங்கரவாதிகள் பயன்படுத்தக் கூடும். இதனை எதிர்கொள்ள உலகத் தலைவர்கள் தயாராக வேண்டும்.



இதனைவிட பெருந்தொற்றை எதிர்கொள்ள உலக சுகாதார நிறுவனம் பில்லியன் டொலர்கள் கட்டமைப்புக் கொண்ட குழு ஒன்றையும் நிறுவ வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான ஆய்வுகள், கண்டிப்பாக செலவு அதிகம் கொண்டதாக இருக்கும். ஆனால் அதிக பலனைத்தரும். இதற்காக பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தாராளமாக செலவு செய்ய முன்வர வேண்டும். இதன்மூலம் அடுத்த தொற்றுநோய்களை எதிர்கொள்ள உலக நாடுகள் தயாராக வேண்டும் எனவும் பில்கேட்ஸ் தெரிவித்தார். (நி)

## காலநிலை மாற்றத்தை சமாளிக்க 290 மில்.பவுண்டுகளை வழங்கும் பிரித்தானியா

(லண்டன்)

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை சமாளிக்க ஏழை நாடுகளுக்கு உதவ 290 மில்லியன் பவுண்டுகளை வழங்குவதாக பிரித்தானியா உறுதியளித்துள்ளது.

கிளாஸ்கோவில் காலநிலை மாற்ற உச்சிமாநாடு இரண்டாவது வாரமாக இடம்பெற்று வரும் நிலையில் உலக நாடுகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளின் காலநிலை நடவடிக்கைகளில் திட்டமிடுவதற்கும் முதலீடு செய்வதற்கும், பாதுகாப்பை அதிகரிக்கவும் குறைந்த கார்பன் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் பணத்தை வழங்குவதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலநிலை மாற்றத்தால் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு இழப்பீட்டை நன்கொடையாக வழங்க ஸ்கொட்லாந்து உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)




காலநிலை தொடர்பான கோப்-26 மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய பங்குபற்றி உரையாற்றிய நிலையில் அவரை கைது செய்யு மாறு கோரி கடந்த சனிக் கிழமை லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

## மலேசிய தமிழ் மகனின் தூக்குத் தண்டனையை உறுதி செய்தது சிங்கப்பூர்

(சிங்கப்பூர்சிற்றி)

கடந்த 2009 ஆம் ஆண்டு சிங்கப்பூருக்கு 42 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கடத்திச் சென்ற வழக்கில் கைது செய்யப்பட்ட மலேசியா வாழ் தமிழர் நாகேந்திரனின் தூக்குத் தண்டனையை சிங்கப்பூர் உள்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

சிறையில் உள்ள நாகேந்திரனை விடுதலை செய்யக் கோரி 40 ஆயிரம் பேர் ஒன்லைனில் மனு கோரினர்.

அதற்குப் பதிலளித்துள்ள சிங்கப்பூர் உள்துறை அமைச்சகம், தெரிந்தே செய்த தவறுக்கு மன்னிப்பு கிடையாது என்றும், தூக்குத் தண்டனை நாளை நிறைவேற்றப்படும் எனவும் அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி-5)

## சீரற்ற வானிலை காரணமாக நால்வர் உயிரிழப்பு



(சென்னை)

தமிழகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக பேரிடர் மீட்புத்துறை அமைச்சு தெரிவித்தது.

தமிழகத்தில் கொட்டித் தீர்த்த கனமழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். 47 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. சுமார் 260 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (நி-5)

## உலகத் தலைவர்கள் தரவரிசையில் தொடர்ந்தும் முதலிடத்தில் மோடி

(வோஷிங்டன்)

உலகத் தலைவர்கள் தரவரிசை தொடர்பாக கடந்த செப்டெம்பர் மாதம் வெளியான பட்டியலிலும் பிரதமர் மோடி 70 சதவீத ஆதரவு பெற்றிருந்தார்.

அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் உலகளாவிய தலைமைத்துவ அங்கீகார மதிப்பீட்டாளரான மார்னிங் கன்சல்ட் நிறுவனம், உலக நாடுகளின் அரசியல் நகர்வுகளை அடிப்படையாகக் கொண்டு வாராந்திர அடிப்படையில் தலைவர்களை மதிப்பிட்டு வருகிறது. 18 வயதுக்கு மேற்பட்டோரிடம் எடுக்கப்படும் ஆய்வுகள் மூலம் இந்த மதிப்பீடு வெளியிடப்படுகிறது.

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், மெக்சிக்கோ, தென் கொரியா, ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய 13 நாடுகளின் தலைவர்களுக்கான அங்கீகார மதிப்பீட்டு முடிவுகளை தற்போது வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 4 ஆம் திகதி நிலவரத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்ட இந்தப் பட்டியலில் 70 சதவீத ஆதரவு பெற்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.


இந்தப் பட்டியலில் மெக்சிக்கோ ஜனாதிபதி லோபஸ் ஒப்ரடார் (66 சதவீதம்), இத்தாலி பிரதமர் மரியோ டிராகி (58 சதவீதம்), ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல் (54 சதவீதம்), அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன் (47 சதவீதம்), அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடன் (44 சதவீதம்), கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ (43 சதவீதம்), இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் (40 சதவீதம்) இடம் பிடித்துள்ளனர். (நி-5)

# சட்டவிரோத கடல் தொழில்களால் அருகி வரும் மீனினங்கள்

## கடற்றொழிலாளர்கள் ஆதங்கம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் சட்டவிரோத தொழில்களால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 73 கிலோ மீற்றர் வரையான கரையோரப் பிரதேசங்களிலே ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பிரதேசங்களில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் அதாவது அனுமதிக்கப்படாத தொழில் நடவடிக்கைகள் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் தடை செய்யப்பட்ட தொழில் உபகரணங்களைப் பாவித்து கடல் வளங்களை அழித்தல் போன்ற செயற்பாடுகளால் மீனினம் அருகி வருவதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர். (4-5-315)

# பூநகரி வினாசியோடை பாடசாலைக்கு இன்று முதல் படகுச் சேவை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி வினாசியோடை அ.த.க.பாடசாலைக்கு படகு மூலம் ஆசிரியர்கள் பயணிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வினாசியோடை பாடசாலைக்கு போக்குவரத்து நெருக்கடி பத்து வருடங்களாக உள்ளது. அதற்கு தீர்வு இதுவரை காணப்படவில்லை. ஒரேயொரு பேருந்து மட்டும் கௌதாரிமுனை வரை சென்று வரும். ஆசிரியர்கள் உந்துருளியிலேயே சென்று வருவார்கள்.

தற்போது வீதியில் களிமண் பரவப்பட்டதன் காரணமாக எந்த வாகனங்களும் மழை நே ரத்தில் பயணிக்க முடியாது. மழை ஓய்ந்தால் வாகனங்கள் பயணிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

படகு மூலம் ஆசிரியர்களை ஏற்றுவதற்கான ஏற்பாடே தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திடம் படகு சேவை தொடர்பாக கோரிக்கை விடுத்துள்ளோம். சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் காவலரண் பகுதியில் இருந்து இன்று இப்படகுச் சேவையினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4-5-350)

# தனித்தீவாக துண்டிக்கப்படும் நிலையில் கிளிநொச்சி ஊற்றுப்புலம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஊற்றுப்புலம் பகுதியில் வீதி அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வருகின்றன.



அந்த வகையில் வள்ளுவர் பண்ணையையும் நாவலர் பண்ணையையும் இணைக்கும் வீதியில் அமைந்துள்ள பாலத்தின் நிர்மாணப்பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

குறித்த வீதிக்கு மாற்றீடாக அமைக்கப்பட்ட வீதிக்கு மேலாக குளத்து நீர் தேங்கி நிற்பதால் வாகன போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அவசர தேவையின் நிமித்தம் செல்பவர்கள், தொழிலிற்கு செல்பவர்கள் பாதிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



இதேவேளை, நோயாளர்களை அழைத்து செல்வதிலும் மாணவர்கள் பாடசாலை செல்வதிலும் பாரிய சவால் காணப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாகனங்களை மறுபுறத்தில் நிறுத்திவிட்டு நோயாளர்களை தூக்கியே கடக்க வேண்டிய நிலை தற்போது உள்ளதாகவும் தொடர்ந்து மழை பெய்தால் முற்றாக போக்குவரத்து தடைப்பட்டு 90 குடும்பங்களும் தனியாக நீரில் சூழ்ந்த பிரதேசத்தில் சிக்கிக்கொள்ளும் அபாய நிலை ஏற்படும் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், உடனடியாக மாற்று நடவடிக்கை மேற்கொண்டு தருமாறு மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய கிளிநொச்சி அரச அதிபர் உள்ளிட்ட குழுவினர் அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டனர். (4-5-100-316)

# பிரதேச செயலாளரின் அனுமதியுடன் மணலைப் பெற்றுக் கொள்ளலாம்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றின் மணல் கரைச்சி பிரதேச செயலாளரின் மூலம் அக்கராயன் பிரதேச மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் ஆறு துப்புரவு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில் அக்கராயன் ஆற்றின் மணலினை கரைச்சி பிரதேச செயலாளரின் அனுமதியுடன் பொது மக்கள் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் ஆறு கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக துப்புரவு செய்யப்படாமல் இருந்தது. தற்போது முதற்கட்டமாக அக்கராயன் குளத்தில் இருந்து கந்தபுரம் மரப்பாலம் வரை துப்புரவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அக்கராயன் பிரதேச மக்கள் வீட்டுத்திட்டம் உட்பட பல தேவைகளுக்கு மணலைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-5-350)

## வீதி சீரின்மை

# பேருந்து வசதி இன்மையால் உழவு இயந்திரங்களில் சென்ற ஆசிரியர்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி வினாசியோடை அ.த.க.பாடசாலைக்கு உழவு இயந்திரங்களில் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்வதாக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பாடசாலைகள் ஆரம்பித்துள்ள நிலையில் பூநகரி பரமன்கிராய் சந்தியில் இருந்து வினாசியோடை பாடசாலை வரையான வீதி சேதமடைந்துள்ளதால் பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை., இதனால் ஆசிரியர்கள் உழவு இயந்திரத்திலேயே பாடசாலைக்குச் சென்றனர் என அவர் தெரிவித்தார்.

கௌதாரிமுனை, வினாசியோடை ஆகிய கிராமங்களுக்கு நடைபெற்று வந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை ஏன் நிறுத்தப்பட்டது என இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் வை.கிருஸ்ணகுமாரிடம் கேட்டபோது, கௌதாரிமுனை வீதியில் வாகனங்கள் புதையக் கூடிய வகையில் களிமண் பரவப்பட்டுள்ளது. மழை நேரத்தில் பேருந்துகள் செல்லும் போது வீதியில் புதைவதனால் பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.(4-5-350)

# கிளிநொச்சியில் தொடர் மழை குளங்களின் நீர்மட்டம் உயர்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாட்களாக பெய்து வரும் தொடர்மழை காரணமாக இரணைமடுக்குளம் உள்ளிட்ட குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

நேற்றுக் காலை கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி கிளிநொச்சி மாவட்ட கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 22 அடி 9 அங்குலமாக உயர்வடைந்துள்ளது.

இதேபோல் கல்மடுக்குளம், பிரமந்தனாறு, கனகாம்பிகை குளம் ஆகியவற்றின் நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளது.

மேலும் கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள குளங்களிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. (4-5-315)




தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் வடமாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு பொது அமைப்புக்களின் மூலம் மரநடுகையை ஊக்குவித்து வருகிறது. இதனொரு கட்டமாக வடமராட்சி அல்வாயிலுள்ள பொது அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவ்வமைப்புகளின் பிரதிநிதிகளிடம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022

## பத்தாமிடத்தில் குரு பகவான்; பதவியில் மாற்றம் உருவாகும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**ஆலோசனைகள் சொல்வதில் அசகாய சூரர்கள் என்று பெயர் பெற்ற ரிஷப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 13.11.2021 முதல் 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 10 இல் ஒரு பாவியாவது இருக்க வேண்டும் என்பது ஜோதிட நியதி. ஆனால் இப்பொழுது சுபக்கிரகமான குருவே அமரப்போகின்றார். உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே அவர் 10 ஆம் இடத்திற்கு வரும்பொழுது பெரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்த மாட்டார்.

10 இல் வந்த குருவால் ஏற்படும் பதவி மாற்றம் நல்ல மாற்றமாகவே இருக்கும். சிலருக்கு பணிபுரியும் இடத்தில் முக்கிய பொறுப்புகள் கொடுக்கப்படலாம். சிலருக்கு பதவி நீடிப்புகள் ஏற்படலாம். பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் சேரக் கூடிய வாய்ப்பு உருவாகலாம்.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குருபகவான் 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே அந்த 3 இடங்களும் புனிதமடைகின்றன. குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் குடும்ப ஸ்தானம் பலப்படுகின்றது. அது, வாக்கு, தனம் எனப்படும் இடமாகவும் கருதப்படுவதால் வருமானம் அதிகரிக்கும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். தாயின் உடல்நலம் சீராகும்.

குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். பணி புரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். கேட்ட சலுகைகள் கிடைக்கும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரும்.

இதுவரை வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை குறைந்து சந்தோசத்தைக் கொடுக்கும். தொழிலை மேம்படுத்த அதற்கான முதலீடுகள் செய்ய விரும்புவர்களுக்கு வங்கிகளின் ஒத்துழைப்பும், வள்ளல்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரசியல் மற்றும் பொது நலத்தில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புகள் தேடிவரும்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம்(13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். களத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது சுபச்செலவுகள் அதிகரிக்கும். படித்து முடித்து வேலையில்லாமல் இருந்த வாழ்க்கைத் துணைக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். கணவன்-மனைவி இருவரும் ஆளுக்கொரு இடத்தில் இருந்து பணிபுரிந்தால், அவர்கள் ஒரே ஊரில் பணிபுரியும் வாய்ப்பு இனி அமையும்.

**ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசியிலேயே ராகு பகவான் சஞ்சரிக்கின்றார். ராகு சுய பலமற்ற கிரகம். அவர் ஆரம்பத்தில் சுக்கிரன் வீட்டில் சஞ்சரிக்கின்றார். எனவே சொத்து விற்பனையால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் பணி ஓய்விற்குப் பிறகும் பணி நீடிப்பு கிடைக்கலாம். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.




**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை).**

நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். காரணம், குரு உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைக் கிரகமாவார். உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அஷ்டமாதிபதியான குரு தன் சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது இழப்புகளையும் கொடுப்பார். அதை ஈடுகட்ட இலாபத்தையும் கொடுப்பார். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**ராகு-கேது பெயர்ச்சி காலம்**

குருப்பெயர்ச்சி காலத்தில் 21.3.2022 இல் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வந்த ராகு, 12 ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு செல்கின்றார். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேது 6 ஆம் இடத்திற்கு செல்ல இருக்கின்றார்.

மறைந்த ராகுவால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். வெளிமாநிலம் அல்லது வெளிநாட்டில் பணிபுரிய வரும் வாய்ப்புகளைப் பற்றிச் சிந்திப்பீர்கள்.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் சிவபெருமானின் குடும்பப் படம் வைத்து திருவாசகம் பாடி வழிபடுவது நல்லது. வாய்ப்பிருக்கும் பொழுது உங்களுக்கு அனுகூலமான நாளில் உங்களுக்கு அருகில் உள்ள சிவன் ஆலயத்தில் உள்ள தட்சிணா மூர்த்தியை வழிபட்டு திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக்காலம். 26.2.2020 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்-சனி சேர்க்கை காலம்.

இக்காலத்தில் மிகமிக கவனத்தோடு செயற்படுவது நல்லது. உங்கள் இராசிக்கு தர்ம கர்மாதிபதி யோகத்தை தரக் கூடியவர் சனி. அவரை சப்தம விரயாதிபதியான செவ்வாய் பார்ப்பதால் குடும்பத்தில் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் வரலாம்.

கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் கைகூடாமல் போகலாம். வாகனத்தால் தொல்லை உண்டு. 'வாங்கிய இடத்தை விற்க முடியவில்லையே' என்று கவலைப் படுவீர்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு நினைத்த காரியம் நிறைவேறும். குருபார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். சம்பள உயர்வுடன் கூடிய இடமாற்றங்கள் அமையும். வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கொடுக்கும்.

(தொடரும்)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை

## அதிகரிப்பு - மருத்துவர் சுதத்

(கொழும்பு)

**சீரற்ற வானிலையால் நாட்டில் மீண்டும் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.**

கடந்த 4 ஆம் திகதி வரை நாட்டில் 22,902 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். தற்போது டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுவதால் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார். (நி-5)



# கட்டுப்பாடுகளைக் கடுமையாக்க தயாராகிறது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறைக் காலத்தில் கடுமையான கொவிட் சுகாதார வழிகாட்டல் கட்டுப்பாடுகளை விதிக்க சுகாதார அமைச்சு தயாராகி வருகிறது.

நாட்டில் குறைந்து வந்த கொரோனாத் தொற்று மற்றும் மரணங்கள் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் மீண்டும் சிறிது சிறிதாக அதிகரித்து வரும் நிலையிலேயே பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கடும் கட்டுப்பாடுகளை விதிக்க சுகாதார அமைச்சு தயாராகி வருவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)

# விலை அதிகரிப்பால் எவரும் உயிரிழக்கவில்லை

## விலையேற்றம் ஒரு விடயமேயல்ல என்கிறார் ரஞ்சித் பண்டார

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றத்தினால் எவரும் பட்டினியால் உயிரிழக்கவில்லை. சீனி, அரிசி ஆகிய பொருட்களின் விலை அதிகரிப்பு பெரியதொரு விடயமல்ல என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவது பயனற்றது.

பொருட்களின் விலையை நிர்ணயித்தால், சந்தையில் பொருள் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்படும். எதிர்பார்க்காத அளவு பொருட்களின் விலை அதிகரிக்கப்படும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தினால் எவரும் உயிரிழக்கவில்லை. சீனி, அரிசி, சீமெந்து ஆகியவை பெரும் பிரச்சினையல்ல. அவற்றை காட்டிலும் தீர்க்க வேண்டிய பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கொவிட்-19 தாக்கத்திலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாத்ததற்கு அரசாங்கத்திற்கு மக்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# பதவி விலகும் ருவான்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்தக்கூடிய ஒருவருக்கு தனது பிரதித் தலைவர் பதவியை கையளித்து விட்டு, தான் அந்தப் பதவியை இராஜினாமா செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகின.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற செயற்குழுக்கூட்டத்தின் போதே அவர் தனது முடிவினை அறிவித்துள்ளதாகவும் ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் கட்சித் தலைவரை சூழவுள்ள சிலர் மாத்திரமே கட்சிக்குள் உள்ளதாகவும் கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## நன்றி சொல்லும் நற்பழக்கம்

எதிர்பாராத பயணம் காரணமாகத் திருச்சி ரயில் நிலையத்தில் சிக்கிக்கொண்டேன். திகதி நினைவில்லை. மறுநாள் காலை நான் சென்னையில் இருந்தாக வேண்டும். டிக்கெட் மட்டும் எடுத்துக்கொண்டு, சிட்டிங்காவது வாங்கிவிட முடியாதா? என்ற நம்பிக்கையில் டிக்கெட் பரிசோதகரை நோக்கி நடந்தேன்.

சேர் ஒரு சிட்டிங் சென்னைக்குக் கிடைக்குமா? கிடையாது-மொட்டையான பதில் பலருக்குச் சொல்லி அலுத்துப்போன வார்த்தை. தாங்க்யூ சேர் என்று சொல்லிவிட்டு ஓரமாக ஒதுங்கினேன்.

ரயில் கிளம்ப ஐந்து நிமிடங்களே இருந்தன. டிக்கெட் பரிசோதகரைப் பலரும் ஈயென மொய்த்தார்கள். எல்லோருக்கும் அதே பதில் தான்.

ஏதோ டிக்கெட் கான்சலாகியிருக்க வேண்டும். மொய்த்தவர்களையெல்லாம் விலக்கிவிட்டு மிஸ்டர்! என்றார் டிக்கெட் பரிசோதகர். என்னைத்தான் கூப்பிடுகிறார் என்று உறுதி செய்து கொண்டு முன்னோக்கி நகர்ந்தேன். நீங்கள் ஏறிக்கொள்ளுங்கள். தாங்க்யூ வெரிமச் சேர்.

எத்தனையோ பேர் அவரைக் கேட்டிருக்க, எனக்கு மட்டும் அவர் உதவுவானேன்? காரணம் வேறொன்றுமில்லை. -தாங்க்ஸ்! அந்தச் சொக்குப் பொடி வார்த்தைதான் காரணம்.

சிட்டிங்கிற்கு இரசீது எழுதியபோது அவரும் அதை உறுதி செய்தார். உங்கள் அணுகுமுறை என்னைக் கவர்ந்தது என்றார்.

உலகம் பார்மாலிட்டிகளில் அழுந்திக் கிடக்கிறது. இதை நாம் புரிந்துகொண்டு அவற்றிற்கு ஈடுகொடுக்க வேண்டும். பரந்த மனப்பான்மை உள்ளவர் கூட நெருக்கமானவர்கள் கூட அந்த வார்த்தையை நாம் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். நன்றி சொல்வதால் நட்பும் நல்லுணர்வும் வளர்கின்றன.


அது மீண்டும் மீண்டும் உதவி செய்ய வேண்டும் என்னும் மனப்பான்மையை மற்றவர்களுக்குத் தோற்றுவிக்கிறது.

ஒருவர் நமக்கு ஓர் உதவியைச்செய்யக் கடமைப்பட்டிருந்தாலும், உதவியைப் பெற வேண் டியது நமது உரிமையாக இருந்தாலும் நன்றி சொல்வதில் தவறேதுமில்லை. மாறாக மிக நல்லதும் கூட, முன்பின் தெரியாதவர்கள் கூட நம்மைப்பற்றி உயர்வாக எண்ண இந்தப் பழக்கம் உதவுகிறது.

நன்றி சொல்லும்போது அந்த வார்த்தையில் உயிரோட்டம் இருக்க வேண்டும். அது செத்தவன் கையில் வெற்றிலை, பாக்கு கொடுத்த கதையாக இருக்கக் கூடாது. அந்த வார்த்தையை நாம் மனப்பூர்வமாகச் சொல்வதாக மற்றவர்கள் எண்ண வேண்டும்.

வார்த்தைக்கு வார்த்தை நன்றி சொல்லிப் பாருங்கள் அடையும் பலன்கள் தாமாகத் தெரியவரும்.

**லேனா தமிழ்வாணன்**




# நவரத்தின மாலை



சொர்ணபுரியை ஆண்ட மன்னன் வர்மனின் தர்பாரில் நான்கு பண்டிதர்கள் இருந்தனர். அந்த பண்டிதர்களும், மன்னனிடம் ஏதாவது காரணம் காட்டி, பணம் பறித்துக் கொண்டே இருப்பர்.

ஒருமுறை அவர்கள் மன்னனிடம், "அரசே! நேற்று உங்கள் ஜாதகத்தைப் பார்த்தோம். இப்போது துஷ்ட கிரகங்கள் உங்களை ஆட்டிப் படைக்க விரும்புவதாகத்தெரிந்துகொண்டோம். அவை முதலில் உங்கள் இரு கைகளையும் செயலற்றுப்போகும்படி செய்யும்" என்றனர்.

அதைக் கேட்ட மன்னன்பயந்து போய், "இதற்குப் பரிகாரம் ஏதாவது செய்து, விலக்க முடியுமா?" என்று கேட்டான்.

அவர்களும், "ஏன் இல்லை? இதற்குப் பரிகாரமாக நீங்கள் ஒரு தங்கக் கோடரி செய்து, அதனை வெள்ளிக்கிழமை யன்று பூஜித்து ஊர்வலமாய் மேளதாளத்துடன் எடுத்துச் சென்று ஒரு மரத்தின் கிளைகளை வெட்ட வேண்டும்.

பிறகு அக்கோடரியை மெத்தப் படித்த பண்டிதர்களாகிய எங்களுக்கு தானம் செய்துவிட்டால், துஷ்ட கிரகங்களால் உங்களை எதுவும் செய்ய முடியாது" என்றனர்.

மன்னனும் அவ்வாறே, எல்லா ஏற்பாடுகளையும் செய்தான். ஒரு வெள்ளிக் கிழமை யன்று அவன் ஒரு தங்கக்கோடரியை வைத்து பண்டிதர்கள் மந்திரங்களை ஓத, பூஜை செய்தான்.

பிறகு மேளதாளத்துடன் ஊர்வலமாக அதனை எடுத்துக் கொண்டு நகருக்கு வெளியே ஏரிக்கரை மீது உள்ள ஒரு ஆல மரத்திற்குச் சென்றான்.

மன்னனுக்கு மரம் ஏறி பழக்கம் இல்லை. அதனால் மெதுவாக மரத்தின் மீது பலரது உதவியால் ஏறி, தன் கையிலிருந்த கோடரியால் ஒரு வளைந்த கிளையை வெட்ட ஓங்கினான். ஆனால், கோடரி அவனது பிடியிலிருந்து விடுபட்டு ஏரிக்குள் போய் விழுந்தது.

ஏரியில் கோடரி விழுந்த இடத்தில் ஏராளமாய் தாமரை முளைத்திருந்தது. தங்கக்கோடரியை எடுத்து வர ஒரு சில வீரர்கள் ஏரிக்குள் குதிக்கத் தயாராயினர்.

அப்போது தாமரை இலைகளிடையிலிருந்து ஒரு கரிய உருவம் நீர் மட்டத்திற்கு மேல் வந்து, தன் கையிலிருந்த இரும்புக் கோடரியைக் கரை மீது விட்டெறிந்தது. அப்போது அவ்வுருவத்தைக் கண்டு எல்லோரும் நடுங்கினர்.

சேனாதிபதி மட்டும் கொஞ்சம் துணிவு கொண்டு, "யார் நீ?" என்று கேட்டான்.

அந்த உருவமும், "நானா? நான் வந்து... குண்டன்" எனக் கூறியவாறே சட்டென நீரினுள் சென்று விட்டது.

மன்னன் பண்டிதர்களிடம் "இன்னும்மூன்று நாட்களுள் இந்த குண்டன் யாரெனக் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும்.

(தொடரும்)

# மகாபாரதம்




இரவிலும், பகலிலும் அவனுக்குப் பயம் இல்லை. பிறர் ஆயுதத்தால் தாக்க வந்தாலும் அவன் அஞ்சமாட்டான்.

அவனைக் கொடிய விலங்குகளும் பாம்பும் ஒன்றும் செய்யாமல் விலகிச் செல்லும். அவன் அஞ்ச வருவது எதுவும் இல்லை.

புலால் உண்ணாமல் இருப்பது செல்வத்தைத் தரும். புகழைத் தரும். நீண்ட ஆயுளைத் தரும். பின் சுவர்க்கத்தைத் தரும்.

புலால் உண்பவன், கொல்பவன் போலவே பாவம் செய்கிறான். விலைக்கு வாங்குபவன் பொருளால் கொல்கிறான். சாப்பிடுபவன் உண்பதால் கொல்கிறான். ஒரு விலங்கைக் கொண்டு வருபவன், அதனை ஒப்புக் கொள்பவன், கொல்பவன், விற்பவன், வாங்குபவன், சமைப்பவன், புசிப்பவன் இவர்கள் அனைவரும் கொலையாளிகள் தாம்.

இறுதியாகக் கொல்லா மையின் சிறப்பை உனக்கு உணர்த்துகிறேன். கொல்லாமையே உயர்ந்த தானம், கொல்லாமையே சிறந்த நண்பன், கொல்லாமையே யாகங்கள் அனைத்திலும் சிறந்தது.

கொல்லாமை மேற்கொள்பவன் உலக உயிர்களுக்குத் தாயாக விளங்குகிறான். தந்தையாகப் போற்றப்படுகிறான். ஆண்டுகள் பல நூறு ஆனாலும் கொல்லாமையின் பெருமையை முற்றிலும் உரைக்க முடியாது" என்று கூறி முடித்தார் பீஷ்மர்.

### சாதலும், பிறத்தலும் இயற்கை

பீஷ்மர் தருமருக்கு உற்றார், உறவினர் இறப்பின் போது ஆற்றியிருத்தல் எப்படி என்பதை விளக்க எடுத்துக் காட்டாக ஓர் அந்தணனுக்கும், சேனஜித் என்னும் மன்னனுக்கும் நடைபெற்ற உரையாடலைக் கூறினார். "முன்னொரு காலத்தில் சேனஜித்என்றொரு மன்னன் இருந்தான். திடீரென அவன் மகன் இறந்ததால் தாங்க முடியாத துயரத்தில் மூழ்கி இருந்தான்.

செய்வதறியாது திகைத்து யாரிடமும் ஒன்றும் பேசாது செயலற்று இருந்தான். அப்போது அவனது நண்பனான ஒரு அந்தணன் அவனைக் காண வந்தான். "மன்னனே, ஏன் இப்படி அறிவிழந்து இப்படி துயரப்படுகிறாய்?

உண்மையில் உனக்காகவே நீ வருத்தப்பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கிறோம். உண்மை இவ்வாறிருக்க இன்னொருத்தர் மரணத்திற்காக ஏன் துயரப்பட வேண்டும்? எல்லோரும் எங்கிருந்து வந்தோமோ அங்கேயே போக விரும்புகிறோம். பிறப்பு எனில் இறப்பு யார்க்கும் உண்டே!" என்று கூறினான்.

(தொடரும்)

ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உபயோகிக்கக் கூடாது. அதுபோலத்தான் பண்படாத அறிவும்.
– ஹோரம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விடைபெறப்போகும் வீட்டுச் சமையல்

இந்துக்களின் வாழ்வியலில் வாஸ்து சாத்திரம் என்பது மிகவும் முக்கியமானது. வீடு கட்டும்போது வாஸ்து சாத்திரத்தின் பிரகாரம் அளவுத் திட்டங்களை வகுப்பதில் அதிகூடிய கவனம் செலுத்தப்படும்.

அதாவது வாஸ்து பிழைத்தால் கட்டிய மனையில் அமங்கல காரியங்கள் நடக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

அந்தவகையில் வீடு கட்டுவதில் வாஸ்து சாத்திரம் இரண்டு விடயங்களில் அதீத கவனம் செலுத்துகிறது.

அதில் ஒன்று தாய் அறை என்றழைக்கப்படும் சுவாமி அறை. மற்றையது சமையலறை.

இந்த இரண்டு இடங்களும் சரிவர அமையப்பெறும்போது ஏனையவை தக்கதாக அமையும்.

இதில் சமையலறையை மையப்படுத்தி கிணறு அமைகின்ற இடம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது வாஸ்து சாத்திரத்தின் நியதி.

பொதுவில் இலங்கையில் வடகிழக்கு நோக்கிய ஈசானமூலையில் சமையலறை அமைப்பது வழமை.

எனினும் இந்தியாவில் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தென்கிழக்கு நோக்கிய அக்கினி மூலையிலேயே சமையலறை அமைக்கப்படும் மரபு உண்டு.

இந்த மரபு இந்து ஆலய அமைப்புக்குமுரியதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எதுவாயினும் நம் நாட்டில் சிவாச்சாரியர்களின் வீட்டுச் சமையலறை அக்கினி மூலையில் அமைந்திருப்பதைக் காண முடியும்.

இதுகுறித்து வாஸ்து சாத்திரத்தைக் கற்றுணர்ந்தவர்கள் கருத்துரைக்கையில்,

உண்மையில் அக்கினிமூலையில் சமையலறையை அமைப்பதுதான் வாஸ்து கூறும் நியதி என்றும் எனினும் நம் மண்ணில் சிவாச்சாரியர்கள் சிலர் திட்டமிட்டு ஈசானம் நோக்கியதாகச் சமையலறை அமைவதைச் செய்துவிட்டனர் என்றும் இதன் காரணமாக நாம் மிகுந்த துன்பங்களைத் தொடர்ந்து சந்திக்க வேண்டியதாக அமைகிறது என்றும் குறைபடுவதுண்டு.

எதுஎவ்வாறாயினும் சமகாலத்தில் வீடு கட்டுவோர் சமையலறைக்குப் புகைபோக்கி தேவையில்லை என்றும் எரிவாயுவில் சமைக்கும்போது புகைபோக்கி தேவையற்றது என நினைத்து அதனை அமைக்காது தவிர்த்தனர்.

ஆனால் இப்போது எரிவாயுவின் விலை உச்சம் என்பதற்கு அப்பால், எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதும் முடியாத காரியம் என்றாயிற்று.

இந்நிலையில் வீட்டுச் சமையல் விடைபெற்று கடைச்சாப்பாட்டை நோக்கி நகருகின்ற ஒரு புதிய கலாசாரம் உருவாகிறது என்பதுதான் வேதனைக்குரிய செய்தியாகும்.

# கொரோனா எச்சரிக்கையை புறக்கணித்தால் நாட்டின் நிலைமை மோசமடையும்

### மருத்துவ வல்லுநர் சஞ்சீவ கொடகந்த எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கோவிட்-19 நோய்த் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகிறது என்று குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக மருத்துவ வல்லுநர் சஞ்சீவ கொடகந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று காரணமாக கர்ப்பவதித் தாய்மார்களின் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதாக மருத்துவ வல்லுநர் சஞ்சீவ கொடகந்த சுட்டிக்காட்டினார்.

இந்த எச்சரிக்கையை சரியாக புரிந்துகொள்ளாவிட்டால் அதன் எதிர்கால விளைவு சாதகமாக இருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஐவர் வைத்தியசாலையில்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஐவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - தவசிகுளம் பகுதியிலுள்ள மரமொன்றில் காணப்பட்ட குளவிகள் கூட்டில் இருந்து கலைந்துசென்று அப்பகுதியில் நின்றவர்கள் மீது தாக்கியதில் 66, 66, 47 வயதுடைய மூவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் உள்ள மரம் ஒன்றில் காணப்பட்ட குளவிக் கூட்டில் இருந்து குளவி கலைந்துசென்று கொட்டியதில் அப்பகுதியில் நின்ற 13, 31 வயதுடைய இருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருவேறு பகுதிகளில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 5 பேரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ம-3,250,299,)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், பட்டைகாடு, வேப்பங்குளம், 6ஆவது வீதி, அறுகம்புல்வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நாகர் இலுப்பைக் குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பாண்சின்ன குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல் தோட்டம் வீட்டுத் திட்டம், விநாயகபுரம் வீட்டுத் திட்டம், நெளுக்குளம் நீர்வழங்கல் சபை, குருக்கள் புதுக்குளம்-மணியர் குளம், மடுகுளம், புலவனூர், பூவரசங்குளம், செங்கற்படை, சின்னத்தம்பனை (மடுகுளம்), வேளாங்குளம் குருக்களூர் மன்னார் வீதி, விமானப்படை முகாம், வேளாங்குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

### மிகவும் வலுவான

# வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க பசில் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தை மிகவும் வலுவானதாகச் சமர்ப்பிப்பதற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச திட்டமிட்டுள்ளார் என்று அரச வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு, வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இம்முறை வரவு - செலவுத் திட்டத் தயாரிப்பின்போது பெரும் எண்ணிக்கையிலானோரின் பங்களிப்பு பெறப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் வேலைத்திட்டத்துக்கு அமைவாக, நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் அபிப்பிராயங்களும் இதற்குப் பெறப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பொருளாதாரத்துக்கு மிகுந்த அழுத்தம் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, கொரோனா சவால்களை வெற்றிகொண்டு மிகவும் வலுவான பெருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு எதிர்வரும் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ம-3)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."
-லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## பற்றில்லாமல் வாழுங்கள்

❖ நாம் பெரிய மனிதர்கள் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஒருநாள் அனைவரும் உலகத்தை விட்டே செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள். அப்போது மக்கள் நம்மை மறந்து விட்டு, அவரவர் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர்.

❖ கடவுள் என்றும் நிரந்தரமானவர். அவருக்குப் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. எல்லா ஆற்றலும் அவருடையதே. எப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அவரின் அதிகாரத்தின் கீழே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

❖ கடவுளின் கட்டளைப்படியே இயற்கை இயங்குகிறது. எல்லாம் வல்ல கடவுளை நம்மால் வழிபட மட்டுமே முடியும். செயல்களின் பலனை அவரிடம் ஒப்படைத்துவிட்டு பற்றில்லாமல் கடமையில் ஈடுபடுங்கள்.

❖ மக்கள் வணங்கும் எல்லா வடிவங்களிலும் ஒரே கடவுளே வீற்றிருக்கிறார். இதை உணர்ந்து கொண்டால் நம்முள் வேற்றுமை மறைந்துவிடும்.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

12

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



சீன (சுஜோ) (Chinese Suzho), ஹோக்கியன் (Hokkien), ஜப்பான் (Japanese), கொரியன் (Korean), வியட்நாம் (Vietnamese) டங்குட் (Tangut) மற்றும் தண்டுகளை எண்ணுதல் (Counting rods) போன்ற நாடுகளின் எண்முறைமைகள் கிழக்கு ஆசிய முறைமைகள் ஆகும்.

செரோகி (Cherokee), காக்டோவிக் (Kaktovik) போன்ற எண் முறைமைகள் அமெரிக்கன் எண் முறைமைகள் என்று அழைக்கப்படுகின்றன.

எழுத்துக்களை (alphabets) எண்களாக (numbers) பயன்படுத்தும் எண் முறைமைகள் பல நாடுகளில் • இருந்தன/இருக்கின்றன. அவற்றுள் சில அப்ஜாத் (Abjad), ஆர்மீனிய (Armenian), ஆரியபட்டர் (Aryabhata), சிரிலிக் (Cyrillic), ஜீசெ (Ge'ez), ஜோர்ஜியன் (Georgian) கிரீக் (Greek), ஹீப்ரூ (Hebrew), உரோமன் போன்ற எண் முறைமைகள் ஆகும்.

மேல் கூறப்பட்ட எண் முறைமைகளை விட வரலாற்றுக்கு முந்தைய, பண்டைய காலத்து எண் முறைமைகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் அட்டவணை 1 இல் காட்டப்பட்ட பண்டைய சீன எண் முறையாகும். மேலும் சில பண்டைய எண் முறைமைகளாவன, ஏஜியன் (Aegean), அட்டிக் (Attic), பாபிலோனிய (Babylonian), பிராமி (Brahmi), சுவாஷ் (Chuvash), சிஸ்டெர்சியன் (Cistercian), எகிப்திய (Egyptian), எட்ருஸ்கன் (Etruscan), கிளாகோலிடிக் (Glagolitic), கரோஸ்தி (Kharosthi), மாயன், மியூஸ்கா (Muisca), பென்டிமல் (Pentimal), ரூமி (Rumi), குயிபு (Quipu) போன்ற எண் முறைமைகளாகும். மேற்கூறப்பட்ட ஐந்து வகையான எண் முறைமைகள் பற்றியும் இங்கு அலசப்படுகிறது.

மாயர் எண் முறைமை (நான்காம் நூற்றாண்டுக்கு முந்தையது.)

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மாயா நாகரிகம் பண்டைக்கால மத்திய அமெரிக்க நாகரிகம் ஆகும். இப்பகுதி, தற்காலத்தில் இருக்கும் மெக்சிக்கோ, குவாத்தமாலா, ஹொண்டுராஸ் போன்ற நாடுகள் பரவியிருக்கும் மத்திய அமெரிக்கப் பகுதிகளை உள்ளடக்கியது.


மாயர எண்குறி முறைமை (Maya numeral system) என்பது [illegible] நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட இருபதின்ம எண்குறி முறைமை ஆகும். தசம எண் முறை எப்படி உருவாக்கப்பட்டது என்பதை அறிவது இலகுவாகும். எமது கையில் எண்ணுவதற்கு பத்து விரல்கள் உண்டு, ஆகவே தசம எண் முறை இயற்கையாகவே அமைகிறது. ஆனால் கை மற்றும் கால் விரல்களையும் சேர்த்தால் 20.20 ஐ அடியாகக் கொண்டதே (அதாவது 20 மடங்குகளை) மாயர் எண் முறைமையை ஆகும். மாயர் எண் குறிகள் மூன்று குறியீடுகளால் ஆனவை. சுழி எண் கூடு அல்லது சிப்பி வடிவம், எண் ஒன்று ஒரு புள்ளி ஆகும். எண் ஐந்து ஒரு கிடைக்கோடு ஆகும். 19 வரையிலான மாயர் எண்கள் படம் A யில் காட்டப்பட்டுள்ளன. இப் படத்தில் 13 ஐப் பார்த்தீர்களானால் அது கிடை வரிசையில் மூன்று புள்ளிகளும் அதற்குக் கீழே ஒன்றின் மேலொன்றாக அடுக்கப்பட்ட இரண்டு கிடைக் கோடுகளாலும் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

13 என்பது 13 = 5 +5+1+1+1

இது மாயன் முறையில் — + — + ● + ● + ● ஆகும். அதாவது இலக்கம் 13 ஐ மாயன் எண் குறியில் இரண்டு கோடுகளாலும் மூன்று புள்ளிகளாலும் குறிக்கப்படும். அது எவ்வாறு குறிக்கப்படுகிறதென்பது படம் - A காட்டப்பட்டுள்ளது.

**மாயர் எண் குறிமுறைமை (maya numeral system) என்பது இருபதின் எண் குறி முறைமை ஆகும். மாயர் எண் குறிகள் மூன்று குறியீடுகளால் ஆனவை, சுழி எண் கூடு அல்லது சிப்பி வடிவம், எண் ஒன்று, ஒரு புள்ளி ஆகும். எண் ஐந்து, ஒரு கிடைக் கோடு ஆகும்.**

படம்-A மாயர் என் குறிகள்




19 இற்குப் பின்வரும் எண்கள் 20 இன் அடுக்கால் குத்து நிலையில் எழுதப்படும். எடுத்துக்காட்டாக, முப்பத்து மூன்று மூன்று புள்ளிகளுக்கு மேலுள்ள ஒரு புள்ளியாலும் மேலும் இவை அனைத்தும் இருகோடுகளுக்கு மேலாகவும் இருக்கும். இவற்றிலும் முதல் புள்ளி இருபதை அல்லது "1×20" ஐக் குறிக்கும். இது மூன்று புள்ளிகளோடும் இரு கோடுகளோடும் அல்லது பதின்மூன்றுடன் கூட்டப்படும். அதாவது (1×20) + 13 = 33.

**இப்போது எண் 429 எவ்வாறு எழுதப்படுகின்றது என்பதைப் பார்ப்போம்.**

429 = 400+20+9 =1x202+ 1x20+9 ஆகும். இது நானூறுக்கு மேற்பட்ட இலக்கமாகையால் மற்றொரு வரிசை (அடுக்கு) தொடங்கும். எனவே 429 என்ற எண், 400 வரிசையில் ஒரு புள்ளியாலும், 20 வரிசையில் புள்ளியாலும் அதற்குக் கீழ் நான்கு புள்ளிகளாலும் ஒரு கோடினாலும் அமையும். இதனைப் படம் B யில் பார்க்கவும்.


**எண் 5125 எவ்வாறு எழுதப் படுகின்றது என்பதைப் பார்ப்போம்.**

5125=4800+320+5=12x202+ 16x20+5. 400 வரிசையில் இரண்டு கோடுகளும் இரண்டு புள்ளிகளும் 20 வரிசையில் மூன்று கோடுகளும் ஒரு புள்ளியும் அதற்குக் கீழ் ஒரு கோடும் அமையும். இதனையும் படம் B யில் பார்க்கவும்.

($20^3$ அல்லது 8000 வர மற்றொரு வரிசை (அடுக்கு) தொடங்கும். பின்னர் $20^4$ அல்லது 160,000 வர மற்ற வரிசை இப்படியே தொடரும்). சில உதாரணங்கள் படம் C யில் தரப்பட்டுள்ளன.

குறிப்பு- இந்த மாயன் சமூகம் தமிழர்கள் என்று ஒரு சில ஆய்வாளர்கள் மூலம் இன்று முன்வைக்கப்படுகிறது. இந்த மாயன்களின் தோற்றம் பற்றி ஆய்வு செய்தவர்கள் பலரும் இவர்கள் தமிழர்களாக இருந்திருக்கக் கூடுதலான வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்து உள்ளனர். மேலும் சிலப்பதிகாரத்தில் "மயன் விதித் தன்ன மணிக்கால் அமளி" •என்றும் "துயர் நீங்கு சிறப்பின் அவர் தொல்லோர் உதவிக்கு மயன் விதித்துக் கொடுத்த மரபின" எனவும் பாடப்பட்டுள்ளது. இந்த மாயா என்ற சொல் திராவிட மொழியில் மட்டுமே உள்ளது. மற்ற எந்த மொழியிலும் இல்லை. இவ்வாறு பல கருத்துக்களை வைத்து தமிழர் தொடர்பை உறுதிப் படுத்துகிறார்கள் ஆய்வாளர்கள். (தகவல்- இணையம்).

படம்-B மாயர் எண்குறிகள் எழுதும் முறை





சுமேரியர் எண்கள் (கி.மு.சுமார் 3100 ஆண்டுகள்)


எண்களைப் பிரதிநிதித்துவப் படுத்த இலககங்களை அல்லது குறியீடுகளை முதல் பாவித்தவர்களில் சுமேரியர் சமூகமும் ஒன்றாகும். சுமேரியர்கள் ஆரம்பத்தில் எண்களை உருவாக்க ஆறு குறியீடுகளை உபயோகித்தார்கள். இக் குறியீடுகளும் அவற்றின் பெறுமானங்களும் படம்-D யில் காட்டப்பட்டுள்ளது. (தொடரும்)

**மாயன் சமூகம் தமிழர்கள் என்று ஒரு சில ஆய்வாளர்கள் மூலம் இன்று முன்வைக்கப் படுகிறது. இந்த மாயன்களின் தோற்றம் பற்றி ஆய்வு செய்தவர்கள் பலரும் இவர்கள் தமிழர்களாக இருந்திருக்கக் கூடுதலான வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்து உள்ளனர். மேலும் சிலப்பதிகாரத்தில் "மயன் விதித்தன்ன மணிக் கால் அமளி" என்றும் "துயர் நீங்கு சிறப்பின் அவர் தொல் லோர் உதவிக்கு மயன் விதித் துக் கொடுத்த மரபின" எனவும் பாடப்பட்டு உள்ளது**

மாயன் குறியீட்டின் பெறுமானம்





நீங்களும் முயற்சிக்கலாம் 3




மாயன் எண்கள்

## படம் C சில உதாரணங்கள்



## 19 பேர்...

இவர்களில் 11 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

மேலும் மொத்த கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 13,875ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## களனி விபத்தில்...

46) என்ற நபரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் மனைவி இத்தாலியில் தொழில் புரிவதாகவும் அவரின் மகள் (வயது - 22) வெள்ளவத்தையில் தங்கி கல்வி கற்று வருவதாகவும் கூறப்படுகிறது. (ம-3,60)

## தீவகத்தில் காணி...

நேற்று இடம்பெறவிருந்த காணி அளவிடும் நடவடிக்கை தற்காலிகமாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

காணி உரிமையாளரின் ஒப்புதல் இல்லாமல் அல்லைப்பிட்டி ஜே 10 கிராம சேவகர் பிரிவில் 7 பரப்பு காணியும், மண்கும்பான் ஜே 11 கிராமசேவகர் பிரிவில் 8 பரப்பு காணியும் மற்றும் புங்குடுதீவு ஜே 24 கிராமசேவகர் பிரிவில் 14.2 ஏக்கர் காணியும் கடற்படையினருக்காக அபகரிப்பதற்கான அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஒன்று நில அளவை திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவிருந்தது.

இருப்பினும் குறித்த இடங்களில் ஒன்று கூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, காணி அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டுச்செல்வதாக கூறிவிட்டு நிலஅளவைத் திணைக்களம் அவ்விடத்தில் இருந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1161
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 1 2 8 8 2 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0928
M 01 04 05 10 79

மஹஜன சம்பத
திகதி 2021/11/08
சீட்டிழுப்பு இலக்கம் 4580
Q 5 2 4 6 2 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 08.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2875
O 10 34 37 66
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.11.08
சீட்டிழுப்பு இலக்கம் - 610
F 21 46 47 69

## வடக்கு உட்பட...

இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழையுடன் பலத்த காற்று மற்றும் மின்னல் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை எச்சரித்துள்ளது. (ம-3)

## +679...

யாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 545, 935 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## இந்திய மீனவரின்...

ஒருவர் கடலில் தவறிவிழுந்து மாயமானார்.

மாயமான மீனவரை கடந்த 4 நாட்களாக சக மீனவர்கள் தேடிவந்த நிலையில் நேற்று நண்பகல் அவர் காரைநகர் கடற்கரையில் சடலமாக கரைஒதுங்கியிருந்தார்.

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை சேர்ந்தவரே உயிரிழந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3,18,33,104)

## விபரீத முடிவெடு...

பகுதியை சேர்ந்த சுரேஷ்குமார் பவித்திரன் (வயது-16) என்பவராவார்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை இவர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவித்தார். (ம-3,60)

## தடுப்பூசி பெற்றுக்...

நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

இந்நிலையில் இது தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு செல்வதை தடுக்கும் வகையில் சட்டத்தில் இடமுள்ளதா? என்பது தொடர்பில் சட்டமா அதிபரிடம் வினவப்பட்டிருந்தது.

இந்நிலையில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும் என நேற்று தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே, சுகாதார அமைச்சு என்ற அடிப்படையில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களை பொது இடங்களுக்கு செல்வதை தடுக்கும் வகையிலும் செயலி ஒன்றினை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டை இராணு...

னர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஜனநாயக வரைமுறைகளைப் பின்பற்றியே செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் உயர் பதவிகளில் ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை நியமிக்கும் நடைமுறை இன்று தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் செயற்பாடுகளின் மூலமே இது வெளிப்பட்டுவிட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு படையதிகாரிகளை முக்கிய பதவிகளில் அமர்த்துவதனால் மக்களுக்கு எவ்வித நலனும் கிடைக்கவில்லை எனவும், இராணுவ மயமாக்கல் என்பது மிகவும் ஆபத்தான ஓர் விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## உணவுத் தட்டுப்...

நாகல் மற்றும் வடகிழக்கு மாவட்டங்களில் மாத்திரமே நெல் மற்றும் ஏனைய பயிர்செய்கைகளுக்காக வெற்றிகரமாக தயார் செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் புள்ளி விபரங்களுடன் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிலைமை இப்படியே நீடித்தால் எதிர்காலத்தில் நாடு பாரிய உணவுப் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும் என பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## இந்திய மீனவர்...

பாடுகள் மட்டுமல்ல அவர்களை விரட்டியடிக்கும் செயற்பாடுகளும் கடற்படையினரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாகவும் வடக்கு கடல் எல்லையை அதிகளவில் பலப்படுத்தி வைத்துள்ளதுடன் தொடர்ச்சியான கண்காணிப்பு செயற்பாடுகளில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில், வடக்கு கடல் எல்லையில் அத்துமீறும் இந்திய மீனவர்களின் செயற்பாடுகளை தடுக்க எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் தேச எல்லையை தாண்டும் மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் குறித்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான சமிந்த விஜயசிறி, எக்டர் அப்புஹாமி மற்றும் திலிப் வெத ஆராச்சி ஆகியோர் சபையில் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

## பங்காளிக் கட்சி...

சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண.

“தேர்தலுக்கு முன்னர் பங்காளிக் கட்சிகளுக்கு இந்த அரசு பல உறுதிமொழிகளை வழங்கியது. அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

எனக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. இன்னும் சாதாரண எம்.பியாகவே இருக்கின்றேன்.

எனவே, மக்களுக்கு நன்மை பயக்காவிட்டால், அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படாவிட்டால் மாற்று வழியை நாடுவோம்” என்றும் திஸ்ஸ விதாரண ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரமற்ற கைப்பாவை என்றும் சுதந்திரத்துக்குப் பின்னர் உருவான மோசமான அமைச்சரவையே தற்போது உள்ளது என்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் டியூ குணசேகர அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் அரசை எச்சரித்துள்ளனர். (ம-3)

அத கோடிபதி
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1383
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 08.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,804,220
வெற்றி இலக்கங்கள் 09 44 56 72 M

சனிதா
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3718
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 08.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 3,222,760
வெற்றி இலக்கங்கள் 14 50 59 73 V

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,964,597/=
திகதி: 08.11.2021
வெற்றி வாரம்: 3269
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 13 38 39 46 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,767,280/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1557 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 08.11.2021 தினம் திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் 69,274,004/=
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் V 05 43 49 52

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1783
சீட்டிழுப்பு திகதி 08.11.2021
வெற்றி இலக்கங்கள் 02 22 26 68 G
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 27,696,712
Web: www.dlb.lk

# வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவயோகன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் நேற்று முன்தினம் காலமானார்.

உடல் நிலைப் பாதிப்புக்கு உள்ளான நிலையில் அவர் நேற்று முன்தினம் அவருடைய வீட்டில் காலமானார் என்று அவருடைய குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வடக்கு மாகாண சபையில் உறுப்பினராக பதவிவகித்த இவர் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால உறுப்பினராகவும் உடுப்பிட்டிக் கிளைச் செயலாளராகவும் செயற்பட்டு வந்திருந்தார். (ம-03)

# சொந்த நிலத்தில் விவசாயம் செய்ய வனஜீவராசிகள் திணைக்களம் தடை

## நிலத்தை மீட்டுத் தருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் சுமந்திரனிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எங்கள் சொந்த நிலத்தில் விவசாயம் செய்வதை வனஜீவராசிகள் திணைக்களம் தடைவிதிப்பது சரியானதா? கூட்டமைப்புதான் எமது நிலத்தை மீட்டுத் தர வேண்டும் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் காலகாலமாக விவசாயம் செய்துவந்த நிலத்திற்கு வனஜீவராசிகள் திணைக்களம் மக்கள் செல்ல முடியாது என்று தடைவிதித்திருந்தது.

இது தொடர்பில் குறித்த பகுதிக்கு நேரடி விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் நிலைமைகளை ஆராய்ந்தார்.

இதன்போதே பாதிக்கப்பட்ட மக்கள் இந்த கோரிக்கையை முன்வைத்தார்கள்.

மக்கள்இது தொடர்பில்மேலும் தெரிவிக்கையில்,நாம் காலகாலமாக விவசாயம் செய்து வருகின்றோம். அவ்வாறான சூழலில் எம்மை எமது பகுதிகளுக்கு



செல்லக்கூடாது என்று வனஜீவராசிகள் திணைக்களம் தடைவிதிக்கின்றது. எமது வளங்கள் இதற்குள் காணப்படுகிறது.

இவற்றை பயன்படுத்தாத வகையில் தடை ஏற்படுத்துவது எந்தவகையில் நியாயம் ? இதற்கு நல்ல தீர்வை பெற்றுத்தரவேண்டும் என சுமந்திரனிடம் கோரிக்கை விடுத்தார்கள். (ம-03)

# சீரற்ற காலநிலையால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் யாழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வளிமண்டலத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 குடும்பங்களைச்சேர்ந்த 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

சேத விபரங்களில் அதிக காற்று காரணமாக நேற்று நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே 02 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், ஜே 04 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே 427 கிராம சேவகர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும் பாதிக்கப்பட் டனர்.

அத்துடன் சங்கானை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே 171 கிராம சேவகர் பிரிவில் நேற்று ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 4 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (ம-03)


**கிராமசேவகர் பதவிக்கான போட்டிப் பரீட்சை**

Zoom இலவச வழிகாட்டல் வகுப்பு

பொது அறிவு

அனுபவமிக்க விரிவுரையாளர்

வேதநாயகம் தபேந்திரன் B.Com, PGD.PDS, MA

09.11.2021 செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணி முதல் 9.00 மணி வரையும்.

Meeting ID : 951 0168 5790

Passcode : vetha

தொடர்பு 076 698 2219

(C-2982)


# நல்லை கந்தனை தரிசிக்கும் நேரம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் எதிர்வரும் தினங்களில் இடம்பெறவுள்ள சூரசம்கார உற்சவம் மற்றும் திருக்கல்யாண உற்சவம் என்பவற்றுக்கு பக்தர்களை அனுமதிக்கும் நேரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி நாளை புதன்கிழமை சூரசம்கார உற்சவத்திற்காக அதிகாலை 4.30 மணி தொடக்கம் காலை 7.30 மணி வரையிலும் மாலை 3.00 மணி முதல் அர்த்தசாமம் வரையான நேரங்களில் முருகனை தரிசிக்கலாம். மேலும் நாளை மறுதினம் வியாழக் கிழமை திருக்கல்யாண உற்சவம் அன்று காலை 7.00 மணி முதல் மாலை 3.00 மணி வரையும் மாலை 5.30 மணி முதல் அர்த்தசாமம் வரையிலான நேரப் பகுதிகளிலும் பக்தர்கள் நேரடியாக முருகனைத் தரிசிக்க அனுமதிக்கப்படுவர் என ஆலய வட்டார தகவலில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03,33)

# விலையேற்றம் குறித்து பொறுப்பற்ற கருத்து

## இராஜாங்க அமைச்சர் சாடல்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் குறித்து வர்த்தகத்துறை அமைச்சரும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் பொறுப்பற்ற வகையில் குறிப்பிடும் கருத்துக்கள் கவலைக்குரியது.

அவ்வாறான கருத்துக்கள் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தும் என நுண்கடன் மற்றும் மனைப்பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசியல் ரீதியில் எத்தீர்மானங்களை முன்னெடுத்தாலும் அது பொதுஜன பெரமுனவின் அரசியல் இருப்பிற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)


**4ஆம் ஆண்டு நினைவு நாள்**



அன்னை மடியில் 26 - 08 - 1940

ஆண்டவன் அடியில் 09 - 11 - 2017

யாழ். இனுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் லண்டன் Manor Park ஐ வதிவிடமாகவும் கொண்ட

திரு. சங்கரப்பிள்ளை அரியராசா (அரியம்)

( இனுவில் கிராமிய வங்கியின் முன்னாள் பொது முகாமையாளரும் சுன்னாகம் ப.நோ.கூ. சங்க வர்த்தக முகாமையாளராக பணிபுரிந்தவரும் இனுவில் ஒன்றிய ஆயுட்கால உறுப்பினரும் போஷகரும் ஆவார். )

இவ்வுலகம் போதும் என்று அவ்வுலகம் சென்றீரோ
இனிமையான உங்களைத்தான் இறைவன் அரவணைப்பான்
எங்களை அரவணைக்க இனி யார் உண்டு உங்களைப் போன்று
கண்கள் கடலாகுதய்யா கண் இமைக்கும் நேரம் எல்லாம்
கனவுகளாய் உங்கள் நினைவுகள் வந்து முட்டுதய்யா

"குமரஸ்தான்"
செட்டி வீதி,
இனுவில் மேற்கு, இனுவில்.

077 614 4910

த. சிவகுமாரன்
(மருமகன்)

(8546)



**காணி விற்பனைக்கு**

துண்டி சந்திக்கு அருகாமையில் நன்னீர் கிணறு மற்றும் தென்னை மரங்கள் என்பவற்றுடன் 2.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (8547)

070 157 0186



**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL

(C-2918)



**நீங்களும் விரைவில் அமெரிக்காவில். இன்று கடைசி நாள்**

(09-11-2021 செவ்வாய்க் கிழமை)

**அமெரிக்க அதிஸ்ட விசா**



ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

எம்மூடாக அமெரிக்கா சென்றவர்களில் சிலர் இவர்களைப்போல நீங்களும் அமெரிக்கா செல்ல உடனடியாக விண்ணப்பியுங்கள். (C-2919)



அமெரிக்கா விசா வெற்றியாளர்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

0768226244

55000 இலவச விசாக்கள்

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.